OS.No. 64/2020 call along with OS.No. 69/2022

Date : 24.10.2025

Witness Name & Rank – ஈஸ்வரன் - PW1

சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. எனது சொந்த ஊர் எதுவென்றால் திருப்பூர் அனுப்பர்பாளையம் புதூர் ஆகும். தற்போது வழக்கு சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால் பல்லடம் எல்லைக்குள் அமைந்துள்ளது. எனது ஊருக்கும் வழக்கு சொத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் இந்த சொத்தை வாங்கிய போது வில்லங்கம் பார்த்து வாங்கினேன் என்றால் இல்லை, எனது முதலாளியிடம் வாங்கினேன். எனது முதலாளியின் பெயர் எதுவென்றால் காளிமுத்து ஆகும். நான் வடக்கு சொத்தை வாங்கிய போது நேரில் சென்று பார்த்து வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் நிலத்தை வாங்கும் போது நேரில் பூமியை பார்த்தேன் ஆனால் வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. நான் நிலத்தை வாங்குவதற்கு முன்பு வழக்கு சொத்தை பார்த்ததில்லை என்றால் சரிதான்மேற்படி எனக்கு நிலத்தை காளிமுத்து அவர்கள் விட்டதாக சொல்லி உள்ள நிலையில் காளிமுத்து அவர்களுக்கு விற்பனை செய்ததாக சொல்லப்பட்டுள்ள நபர்களையும் அதற்கு முன்னால் முன் உரிமையாளர்களையும் நான் நேரில் பார்த்ததில்லை என்றால் சரிதான்.
2. எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1ன்படி 1993 ஆம் ஆண்டு ஆறுமுகம் என்பவருக்கு நிலம் பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் வழக்கு சொத்துக்கு நான் உரிமை கோரி உள்ளேன் என்றால் சரிதான்நான் தாக்கல் செய்துள்ள அதே வா.சா.ஆ– 1ன்படி மேற்படி ஆறுமுகம் அவர்களுக்கு பொதுவில் பாதி என்று தான் சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 2 கிரைய ஆவணத்திலும் அவ்வாறு பொதுவில் பாதி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் ஆறுமுகத்தை இதுவரை பார்த்ததில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்தானது திருமூர்த்தி நகர் லேஅவுட் அமைந்துள்ளது என்றால் சரிதான் மொத்தம் எத்தனை பிளாட்டுகள் உள்ளது

என்றால் அது பற்றி தெரியாது. அந்த மனை இடம் தொடர்பாக சில நபர்கள் தங்களை போலியாக ஆறுமுகம், கிருஷ்ணவேணி என்று முன்னிறுத்தி சில ஆவணங்களை மோசடி செய்து நிலத்தை விற்றுள்ள தகவல் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் பிரதிவாதி சிவராஜ் குமார் என்ன எதிர்வாதம் செய்தார் என்று எனக்கு குறிப்பிட்ட தெரியுமா என்றால் தெரியாது

(மேற்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---